மூன்றும் நான்கும்

(திரிகடுகம், நான்மணிக் கடிகை)

உரை :
சிலம்பொலி சு. செல்லப்பன்,
எம். ஏ., பி. எல்., பி, டி.

பூம்புகார் பிரசுரம்
63, பிராட்வே
சென்னை 600 001

விலை ரூ. 4-50

பூம்புகார் வெளியீடு எண் : 184
முதல் பதிப்பு : பிப்ரவரி, 1980

அச்சிட்டவர்கள் : கற்பகம் அச்சகம், சென்னை-600002.

பதிப்புரை

சங்கத் தமிழ்ப் பாடல்கள் யாவும் தங்கத் தமிழ்ப் பாடல்களாக உள்ளன. அவை மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்ற பகுப்பில் அடங்குகின்றன. பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் மேற்கணக்கு நூல்களாம். திருக்குறள், நாலடியார், ஐந்திணை ஐம்பது, கார் நாற்பது முதலிய 18 நூல்கள் கீழ்க்-கணக்காம். பொதுவாக மேற்கணக்கு நூல்களைப் போல், இக் கீழ்க்கணக்கு நூல்கள் மிகுதியாகக் கையாளப் படுவதில்லை. திருக்குறள், நாலடியார் போன்ற ஒரு சில நூல்களே தமிழுலகில் பெரிதும் பேசப்படுகின்றன. ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, ஏலாதி, ஆசாரக் கோவை, கார்நாற்பது முதலிய பிற கீழ்க்கணக்கு நூல்களெல்லாம், சங்கப் பாடல்களின் இனிய பிழிவுகளாக எளிமையும் இனிமையும் பொருண்மையும் கொண்டு விளங்குகின்றன. இருப்பினும் இவை குடத்துளிட்ட விளக்காகவே உள்ளன. அவற்றைக் குன்றிலிட்ட விளக்குகளாக ஆக்கித் தமிழ்மொழிக்கு மேலும் பொலிவூட்ட வேண்டும் என்பது எங்கள் ஆசை. அந்த வகையில் கீழ்க்கணக்கு நூல்கள் முழுவதையும் எளிய இனிய உரையுடன் வெளியிடுவது இன்றியமையாதது ஆகிறது.

எளிய இனிய உரை எனும்போது சங்கப் பாடலிலிருந்து இன்றுள்ள புதுக் கவிதை வரையிலும், ஈடுபாட்டுடன் தோய்ந்த நல்லறிஞர் ஒருவர் அதை எழுதுவது சிறந்தது என்பதால் திருமிகு சிலம்பொலி செல்லப்பன், எம். ஏ., பி. எல்., பி. டி. அவர்கள் எழுதியுள்ள எளிய இனிய உரையுடன் இந்நூலைத் தமிழுலகிற்குப் படைத்துள்ளோம். இந்நூலுள் **திரிகடுகமும், நான்மணிக் கடிகையும்** உரையுடன் அமைந்துள்ளன. இதனைத் தொடர்ந்து எஞ்சிய கீழ்க்கணக்கு நூல்களும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— **பூம்புகார் பிரசுரம்**

நூன்முகம்

தமிழர்தம் உயர்வை உலகுக்கு உணர்த்துவன சங்கப் பாடல்கள். ஆன்றோர் அப்பாடல்களின் பல்வேறு தன்மைகள் கருதி, அவற்றை மேற்கணக்கு நூல்கள் என்றும், கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் இருபிரிவாகப் பாகுபடுத்தி உள்ளனர். ஒவ்வொரு பிரிவிலும் பதினெட்டு நூல்கள் அடங்கியுள்ளன. அம் முப்பத்தாறு நூல்கட்கும் பல உரைகள் இதுவரை வெளிவந்துள்ளன. அவை பதவுரை, பொழிப்புரை, குறிப்புரை, விளக்கவுரை, கருத்துரை என்று பலபடியாக அமைந்துள்ளன. ஆயினும், ஓரளவு கற்றோரும்கூட கீழ்க்சணக்கு நூல்களை நன்கு படித்துணரும்வண்ணம், அவை நேரிய எளிய உரையுடன் வெளியிடப் பெற வேண்டும் என்ற பூம்புகார் பிரசுரத்தாரின் விருப்பிற்கிணங்க இவ்வுரை நூல் வெளிவருகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எவை என்பதை,

> "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
> கைந்நிலை காஞ்சியோ(டு) ஏலாதி என்பவே
> மெய்ந்நிலைய வாம்கீழ்க் கணக்கு"

என்ற பழம்பாடல் தெரிவிக்கிறது. இவற்றில் கடுகம் என்று குறிப்பிடப்படும் திரிகடுகமும்,

நான்மணி என்று குறிப்பிடப்படும் நான்மணிக் கடிகையும் 'மூன்றும் நான்கும்' என்ற இந்நூலில் அடங்கியுள்ளன. மூன்று என்பதில் திரிகடுகத்தையும், நான்கு என்பதில் நான்மணிக்கடிகையையும் குறித்துள்ளேன். நான்கு என்பது நாலடியாரையும் குறிக்கும் என்றாலும் அஃது அடியாற் பெற்ற பெயராம். எனவே, ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று கருத்தைக் கூறும் திரிகடுகத்தையும், நந்நான்கு கருத்தைக் கூறும் நான்மணிக்கடிகையையும் 'மூன்றும் நான்கும்' என்பதில் அடக்கியுள்ளேன்.

திரிகடுகம் என்ற நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார். ஆதன் என்பது இவர் இயற்பெயர். அவர் மிக நல்ல பண்புகள் வாய்ந்துள்ளவராகவும், இனியவராகவும் இருந்திருக்கிறார். இதை அவர் நல்லாதனார் என்று அழைக்கப்பட்டிருப்பதாலேயே அறியலாம். பூவைப்பூ வண்ணனை (திருமாலை), கடவுள் வாழ்த்தில் வணங்கியிருப்பதால் இவர் வைணவ சமயத்தவராக இருக்கலாம் என்று கருத இடமுண்டு. திரிகடுகம் பற்றி வழங்கிவரும் மற்றொரு பாடலால் இவர் 'திருத்து' என்ற ஊரினர் என்பது தெரிகிறது.

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றால் செய்யப்பட்ட நல்ல மருந்து; உடலுக்கு நலமூட்டுவது. அதுபோல ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று நல்ல கருத்துக்களை வைத்துப் பாடியிருப்பதால், இந்நூல் திரிகடுகம் என்று பெயர் பெறலாயிற்று. இந்நூலுக்குத் திருக்கோட்டியூர் இராமானுசாச்சாரியார் எழுதிய உரை மிகுதியும் பயிலப்பட்டு வருகிறது. யாவரும் புரிந்துகொள்ளும் வண்ணம், மேலும் எளிய உரை

வேண்டும் என்ற எண்ணப்படி இவ்வுரை எழுதப் பட்டுள்ளது.

“கற்றறியாத கீழோனுக்கு உறவாய் நடந்து கொள்வதும், உறுதி கொண்ட மனையாளைக் கோலால் அடித்தலும், கீழ்மைக் குணம் உடைய வரை வீட்டிற்கு அழைத்துச் செல்வதும் அறியாமை யாகும்; அதனால் பெருங்கேடே விளையும்” என்பதுபோன்ற அரிய கருத்துக்கள்—அனுபவ வாயிலான கருத்துக்கள் ஒவ்வொரு பாடலிலும் அமைந்துள்ளன. கடவுள் வாழ்த்தோடு நூற்றொரு பாடல்கள் கொண்ட இந்நூல் ஒவ்வொருவராலும் படிக்கப்பட வேண்டியதாகும்.

நான்மணிக் கடிகையின் ஆசிரியர் விளம்பி நாகனார் ஆவார். நாகனார் என்பது இவரின் இயற் பெயர். விளம்பி என்பது இவரின் ஊராக இருக்க லாம். கடவுள் வாழ்த்தில் மாயவனைப் போற்று வதால் இவர் வைணவராக இருக்கலாம் என்று கருத இடமுண்டு.

நான்கு மணிகளால் கோக்கப்பட்ட மாலை என்பது இந்நூற் பெயரின் பொருள். ஒவ்வொரு பாடலிலும் நான்கு சிறந்த கருத்துக்களை வைத்துச் செய்தமை நோக்கி இந்நூற்கு நான்மணிக்கடிகை என்று பெயரிடுவாராயினர். நூற்று நான்கு வெண்பாக்கள் அடங்கியுள்ள இந்நூலில், மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அறிவுரைகள் கூறப் பட்டுள்ளன. “ஒருவனுக்குக் கண்ணைவிடச் சிறந்த உறுப்பில்லை; கற்புடைய பெண்ணிற்குக் கணவனை விடச் சிறந்த தெய்வமொன்றில்லை; ஒருவனுக்குத் தன் மக்களை விட உறுதி வேறேதுமில்லை; ஈன்றெடுத்த தாய் போலச் சிறந்த தெய்வம்

ஒருவனுக்கு வேறில்லை'' என்பன ஒரு பாடலில் (பாடல் 56) அமைந்துள்ள நான்கு கருத்துக்கள். இதுபோன்றே ஒவ்வொரு பாடலும் சிறந்த நந்நான்கு கருத்துக்களைத் தாங்கியுள்ளது.

திரிகடுகம், நான்மணிக்கடிகை ஆகிய இரண்டின் சிறந்த கருத்துக்கள், எல்லோருக்கும் புரியவேண்டும் என்ற நோக்கில், பாடலுக்குரிய நேரடியான பொருளை மட்டும் எளிய முறையில் கொடுத்துள்ளேன். மூலச் செய்யுளின் கருத்துணர் வோர், தத்தம் ஆற்றலுக்கேற்றவாறு விரிவும் விளக்கமும் கொள்வர் என்பதை யானறிவேன். படிப்போருக்கு எளிமையாயிருக்கும் பொருட்டு பாடல்கள் பதம் பிரித்துப் போடப்பட்டுள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எல்லோ ராலும் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்ற பதிப்பகத்தாரின் நோக்கம் இந்நூலால் இனிது நிறைவுறும் என்பது என் நம்பிக்கை.

சென்னை
2 2-80

அன்புடன்,
சு. செல்லப்பன்

நல்லாதனார்

இயற்றிய

திரிகடுகம்

உலகில் கடுகம் உடலின்நோய் மாற்றும்;
அலகில் அகநோய் அகற்றும்—நிலைகொள்
திரிகடுகம் என்னும் திகழ்தமிழ்ச் சங்கம்
மருவுநல் லாதன் மருந்து.

உலகத்தில் சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றினாலாய மருந்து உடல் நோய் நீக்குகிறது. சிறப்புப் பெற்ற தமிழ்ச் சங்கத்தில் பொருந்தியதும் நல்லாதனாரால் இயற்றப்பட்டதுமான திரிகடுகம் என்னும் நூலோ எல்லையில்லா மனநோய்களை அகற்றும் மருந்தாகத் திகழ்கிறது.

செல்வத் திருத்துளார் செம்மல் செருஅடுதோள்
நல்லாதன் என்னும் பெயரானே—பல்லார்
பரிவொடு நோய்அவியப் பன்னிஆ ராய்ந்து
திரிகடுகம் செய்த மகன்.

செல்வச் சிறப்புடைய 'திருத்து' என்ற ஊரில் தோன்றிய செம்மலாயும், போரில் வெற்றி கொண்ட தோளினராயும் விளங்கிய நல்லாதன் என்னும் பெயரையுடையவர், உலகிலுள்ளார் மனநோய் அகலுமாறு பரிவொடு ஆராய்ந்து, 'திரிகடுகம்' என்ற நூலைச் செய்தவர் ஆவார்.

கடவுள் வாழ்த்து

1. (மாவலியை அடக்க) இடமகன்ற பூமியை அளந்ததும், விருப்பந்தரும் அழகும் குளிர்ச்சியும் மணமும் பொருந்திய மலர்களைக் கொண்ட குருந்த மரத்தை முறித்ததும், (கஞ்சனால் ஏவப்பட்டுத் தன்னை வருத்த) வந்த வஞ்சகச் சகடத்தை உதைத்ததும் ஆகிய இம்மூன்றும் காயாம்பூ நிறமுடைய திருமாலின் திருவடிச் செய்கை ஆகும். (அத்திருவடிகளை வணங்குதல் செய்வாம்).

நூல்

2. அருந்ததியைப் போன்ற கற்பினையுடைய மகளிரது தோளும், செம்மை சேர்ந்த குடியில் தோன்றிய சிறப்புப் பெற்றவர்களுடைய உறவும், சொற்குற்றங்களை நீக்க வல்ல கேள்வி யறிவுடையாரோடு கொள்ளும் நட்பும் ஆகிய இம்மூன்றும் (ஒருவனுக்குச் சுக்கு, மிளகு, திப்பிலி என்னும்) திரிகடுகம் போன்ற மருந்தாகும்.

3. தன் (உயர்ந்த) குணங்களிலிருந்து வழுவாத பெருந்தகைமையும், குற்றமற்ற பெருமை கொண்ட இனிய குணமுடையோர் ஏவியவற்றைச் செய்தலும், (அறத்தின் இயல்பை) நன்கறிந்த நான்மறையாளர் சொல்லிய வழியில் நடத்தலும் ஆகிய இம்மூன்றும் மேலான நெறியினையுடைவர்களது தொழில்களாம்.

4. கற்றறியாதாரோடு நட்பாய் நடத்தலும், தீரா வெகுளி கொண்ட மனைவியைக் கோலினால் அடித்தலும், தன் விட்டினுள் சிற்றறிவினரை அழைத்துக் கொண்டு செல்லுதலும் ஆகிய இம்மூன்றும் அறியாமையினால் ஒருவர்க்கு வரும் கேடுகளாம்.

திரிகடுகம்

கடவுள் வாழ்த்து

கண்ணகல் ஞாலம் அளந்ததூஉம், காமருசீர்த்
தண்நறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம், - நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி. 1

நூல்

அருந்ததிக் கற்பினார் தோளும், திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்,-சொல்லின்
அரில்அகற்றும் கேள்வியார் நட்பும்இம் மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து. 2

தன்குணம் குன்றாத் தகைமையும், தாவில்சீர்
இன்குணத்தார் ஏவின செய்தலும், - நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவும் இம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில். 3

கல்லார்க்(கு) இனனாய் ஒழுகலும், காழ்கொண்ட
இல்லாளைக் கோலால் புடைத்தலும், - இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும்இம் மூன்றும்
அறியாமை யால்வரும் கேடு. 4

5. பகைவர் முன்னே (வளம்பட) வாழ்க்கை நடத்துதலும், கூட்டமாய் நிற்கும் மாடுகளின் நடுவே தடியில்லாமல் செல்லுதலும், முன்னே நின்று (பொறாமையால் தன் உள்ளம் புழுங்கித்) தன்மீது எரிந்து விழுவானிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ளுதலும் ஆகிய இம் மூன்றும் சாவ விரும்புகின்றவனது செயல்களாம்.

6. யாரும் நடக்காத துறையில் இறங்கி நீரைக் கடந்து செல்லுதலும், ஒத்த அன்பில்லாத பெண்டிர் (அதாவது வேசையர்) தோளைத் தழுவுதலும், வறுமையால் வருந்திய நிலையில் விருந்தாளியாய் அயலூரில் புகுதலும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்கு மிகுந்த துன்பத்தைக் காண்பிக்கும் வழிகளாம்.

7. அயலார் தன்னைப் புகழுமிடத்துத் தான் அதற்கு நாணுதலும், பகைவர் தன் தகுதியை வேறுபடச் சொல்லும் பொழுது அதனைப் பொறுத்தலும், அறச்செயலை மழை மேகம் போல (கைம்மாறு கருதாது பெருக்கி) வளர்த்தலும் ஆகிய இம் மூன்றும் பிறரின் மேம்பட்டுச் செல்லுதல் என்னும் செல்வமாம்.

8. வாளை மீனைப்பற்ற உள்ளான் பறவை முயற்சி செய்தலும் (அதாவது தகுதிக்கு மீறியன செய்ய முயலலும்), ஆளும் ஆற்றல் இல்லாதவன் செல்வக் குடியிற் பிறத்தலும், பலர் கூடியுள்ள அவையில் (தான் கற்றதைச் சொல்லுதற்கு) அஞ்சும் இயல்புடையவன் கற்ற அரிய நூலறிவும் ஆகிய இம்மூன்றும் உறங்குகின்ற ஊமையன் கண்ட கனவைப்போல(ஒன்றுக்கும் பயன்படாதவை) ஆகும்.

9. முதியோர் கூடியுள்ள அவையில் விளங்கித் தோன்றும் குடிப்பிறப்பும், பலரும் கூடியிருக்கும் நல்ல அவையிடத்தே மேம்பட்ட கல்வியும், வெல்லும் போரின் கண் (தம்மை ஆளுகின்ற) வேந்தன் மகிழுமாறு பகைவரைக் கொன்று நிறைந்த வெற்றியும் ஆகிய இம்மூன்றும் தாமே தம்மைக் குறித்துப் புகழ்ந்து பேசவேண்டாத பொருள்களாம். (இவை தாமே பிறர்க்கு விளங்குவன ஆதலின் எடுத்துரைத்தல் பேதைமையாம்.)

பகைமுன்னர் வாழ்க்கை செயலும், தொகைநின்ற
பெற்றத்துள் கோல்இன்றிச் சேறலும், - முன்தன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும் இம்மூன்றும்
சாவ உறுவான் தொழில். 5

வழங்காத் துறைஇழிந்து நீர்ப்போக்கும், ஒப்ப
விழைவிலாப் பெண்டிர்தோள் சேர்வும், - உழந்து
விருந்தினனாய் வேற்றூர் புகலும் இம்மூன்றும்
அருந்துயரம் காட்டும் நெறி. 6

பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும், பேணார்
திறன்வேறு கூறில் பொறையும், - அறவினையைக்
கார்ஆண்மை போல ஒழுகலும் இம்மூன்றும்
ஊர்ஆண்மை என்னும் செருக்கு. 7

வாளைமீன் உள்ளல் தலைப்படலும், ஆள்அல்லான்
செல்வக் குடியுள் பிறத்தலும், - பல்அவையுள்
அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்சுஊமன் கண்ட கனா. 8

தொல்அவையுள் தோன்றும் குடிமையும், தொக்குஇருந்த
நல்அவையுள் மேம்பட்ட கல்வியும், - வெல்சமத்து
வேங்(து)உவப்ப அட்டுஆர்த்த வென்றியும் இம்மூன்றும்
தாம்தம்மைக் கூறாப் பொருள். 9

10. பெருமைக் குணம் உடையவருடைய கூட்டத்திலிருந்து நீங்குதல், தமக்கு உரியர் அல்லாத பெண்டிரை விரும்பி அவரோடு வாழ்தல், சிறப்பு அல்லாதனவற்றைச் செய்யத் துணிதல் ஆகிய இம் மூன்றும் மூடர் விரும்புபவையாம்.

11. கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத ஊரும், மாறுபாட்டைத் தீர்த்து வைக்கும் அறிவிற் பெரியார் இல்லாத அவையும், பகுத்துத் தந்து உண்ணுகின்ற பண்பு இல்லாதவர்க்குப் பக்கத்தில் இருப்பதும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்கு நன்மையைத் தருவது இல்லை.

12. தன்னை அழையாதவன் ஆட்டுவிக்கும் கூத்தைத் தான் சென்று பார்த்தலும், மயங்கி விழும்படியாக மதுவுண்டு களியாதவனாய் இருந்தும் தன் நாவைக் காத்துக் கொள்ளாது (வழுப்படப்) பேசுதலும், தன்னை நம்பாதவன் வீட்டிற்குப் பன்முறையும் செல்லுதலும் ஆகிய இம்மூன்றும் ஊரிலுள்ளோர் எல்லாரும் வருந்தத்தக்க குற்றத்தை உடையவையாம்.

13. முயற்சியுடையவன் என்று சொல்லப்படுபவன் பிறரிடத்தில் கடன்படாமல் வாழ்பவன்; உதவி செய்பவன் என்று சொல்லப்படுபவன் வந்த விருந்தினர் பசித்திருக்கத் தான் மட்டும் தனித்து உண்ணாதவன்; கொள்கையாளன் என்று சொல்லப்படுபவன் நல்லவற்றை மறவாதவன். இம்மூவரும் தனக்கு நட்பினராயிருக்க ஒருவன் வாழ்வது இன்பந்தருவதாம்.

14. பிறருடைய குணத்தை அறிந்து (அதற்கேற்ப) நடக்க வல்லவன் இளமைதொட்டு வந்த உறவினன் ஆவான். மக்களைப் பெரிதும் காப்பாற்ற வல்லவன் அரசன் ஆவான். குற்றமில்லாமல் பெருமை நிறைந்த குணத்தையுடையவன் தவமுடையவன் ஆவான். இம்மூவரும் எவ்விடத்தும் பெறுதற்கு அரியர் ஆவர்.

பெருமை உடையார் இனத்தின் அகறல்,
உரிமைஇல் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்,
விழுமிய அல்ல துணிதல்இம் மூன்றும்
முழுமக்கள் காதல் அவை. 10

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்(கு)அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும், - பாத்து உண்ணும்
தன்மை இலாளர் அயல்இருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல. 11

விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும், வீழக்
களியாதான் காவா(து) உரையும், - தெளியாதான்
கூரையுள் பல்காலும் சேறலும் இம்மூன்றும்
ஊரெலாம் நோவ(து) உடைத்து. 12

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாளன் என்பான் விருந்(து)இருக்க உண்ணாதான்;
கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. 13

சீலம் அறிவான் இளங்கிளை; சாலக்
குடிஓம்பல் வல்லான் அரசன்; - வடுஇன்றி
மாண்ட குணத்தான் தவசி; எனமூவர்
யாண்டும் பெறற்குஅரி யார். 14

15. (நெறியிலிருந்து) வழுவுதலை இளமைப் பருவ முடையோன் இயல்பாக உடையவனாவான்; அறிவில்லான் நல்லார் விலக்கிய சொற்களைச் சொல்லுதலில் வல்லவ னாவான்; சிறியோன் எவ்விடத்தும் சினத்தோடு நிற்கும் தன்மையுடையவனாவ்ான்; ஆதலால் இம்மூவரையும் அறிவுடையோர் சேரார்.

16. பொய்சொல்லி வாழ்கின்ற உணர்ச்சியற்ற பிண்டமும், (தன்னின் மிக்கான் ஒருவன்) முறைமை வேறு பட்டுத் தாழ்ந்தபோது அவனைத் தனக்கு நேராக நினைக் கின்ற மூங்கில் போலும் புரைபட்ட மனத்தை யுடைய வனும், ஒருவனிடம் சேரவேண்டிய முறைப்படி சேர்ந்து அவன் செயல்களிலே தனக்குப் பயன் தேடுகின்றவனும் ஆகிய இம்மூவரும் யாவராலும் நட்புக் கொள்ளத் தகா தவர் ஆவர்.

17. மண்ணுலகில் உயர்ந்த புகழை நிலை நாட்டிய வனும், பெண்களுள் குற்றமற்ற சிறப்புடையவளை மனைவியாகப் பெற்றவனும், குடிநீர்க் கிணறுகளைக் குறைவில்லாமல் தோண்டி வைத்தவனும் ஆகிய இம் மூவரும் எக்காலத்தும் இறவாத (புகழ்) உடம்பைப் பெற்றவராவர்.

18. மூப்பு அடைந்தபோதும் பிறர்க்கு நன்மை புரிவதி லிருந்து நீங்கினவனும், கற்புடைய மனைவியைப் பூத்து நீராடியபின் சேராத கணவனும், நாவன்மையாலே மாறு கொண்ட விடத்துப் பொருள் வெற்றியை ஒழித்துச் சொல் வெற்றியைப் பெற விரும்பும் தவவேடத்தானும் ஆகிய இம்மூவரும் கல்வியால் விளையும் அறிவுப் பிடிப்பைக் கைவிட்டவராவர்.

19. உறுதியாக வந்து சேரும் கிழப்பருவமும், நட்பி னர்க்கு (பிரிந்திருத்தல், பிரிந்து செல்லல் ஆகிய) இரண்டி டத்தும் துன்பத்தைத் துருகின்ற பிரிவும், உடம்பினை உள்ளே உருக்கி(த்தசை முதலியவற்றை) வருத்துகின்ற பெருநோயும் ஆகிய இம்மூன்றும் கள்வரைப்போல் அஞ்சத் தக்கவையாம்.

இழுக்கல் இயல்பிற்(று) இளமை; பழித்தவை
சொல்லுதல் வற்றாகும் பேதைமை;-யாண்டும்
செறுவோடு நிற்கும் சிறுமைஇம் மூன்றும்
குறுகார் அறிவுடை யார். 15

பொய்வழங்கி வாழும் பொறியறையும், கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதும் தட்டையும், ஊழினால்
ஒட்டி வினைநலம் பார்ப்பானும் - இம்மூவர்
நட்கப் படாஅ தவர். 16

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும், -உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்;
சாவா உடம்புஎய்தி னார். 17

மூப்பின்கண் நன்மைக்(கு) அகன்றானும், கற்புடை-யாள்
பூப்பின்கண் சாராத் தலைமகனும்,-வாய்ப்பகையுள்
சொல்வென்றி வேண்டும் இலிங்கியும் இம்மூவர்
கல்விப் புணைகைவிட் டார். 18

ஒருதலையான் வந்துறூஉம் மூப்பும், புணர்ந்தார்க்(கு)
இருதலையும் இன்னாப் பிரிவும், - உருவினை
உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியும் இம்மூன்றும்
கள்வரின் அஞ்சப் படும். 19

20. கொலைக் குணமுடைய யானைக்கு முன்னால் செல்லுகின்ற அறிவில்லாதவனும், இரவிலே பிறன்வீட்டு வாயிலில் நின்று (அவன் மனையாளை விரும்பி) நடக்கின்றவனும், கொடுமை செய்யும் என்பதை அறியாமல் ஆடுகின்ற பாம்பினை ஆட்டுவிக்கின்ற அறிவில்லாதவனும் ஆகிய இம் மூவரும் ஆராயுமிடத்து (அவற்றாலேயே) இறப்பவராவர்.

21. பிறனிடத்திலுள்ள பொருளுக்கு ஒருவன் ஆசைப் படுதலும், தன் சுற்றத்தார் பசித்திருக்கும்படி தான் சோம்பி இருத்தலும், கற்றிலன் என்று வெறுத்துப் பிறரால் ஒருவன் இகழப்படுதலும் ஆகிய இம்மூன்றும் எல்லார்க்கும் துன்பத்தைத் தருவனவாம்.

22. தனக்கு வரும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கை அறத்திற்குச் செலவு செய்து வாழ்தலும், போரினிடத்து வெற்றி கிடைக்கத் தான் செய்த செயல்களுக்குப் பயனை எதிர்பாராத சிறப்புடையன் ஆதலும், நிரம்பப் பலவற்றையும் ஆராய்ந்து அவற்றுள் நல்லவைகளைக் கற்றலும் ஆகிய இம்மூன்றும் நற்குண நற்செய்கைகளால் சிறப்புப் பெற்ற நல்லவர்களுடைய கொள்கைகளாம்.

23. உலக (மனை) வாழ்க்கை என்று சொல்லப்படுகின்ற அன்புத்தளையும், பல பொருள்களின் மேலும் பிடிப்பு நீங்காமல் ஓடுகின்ற ஆசையாகிய தேரும், தெளிவாக (த்தெரிந்தே) பிறரிடத்துப் பொய்சொல்லல் என்னும் பகையாகிய இருளும் ஆகிய இம்மூன்றும் பிறவிக்கு வித்தாகும். அவை கெடப் பிறப்பு ஒழியும்.

24. பிறர்க்குத் தானமாகப் பொருள் கொடுக்கும் குணமும், மானமுடைமையால் குற்றத்தை நீக்கிய ஒழுக்கமும், தெளிவாகப் பல பொருள்களின் மேலுமுள்ள பற்றினை நீக்கிய நினைவும் ஆகிய இம்மூன்றும் நல்வினையை ஒருவனோடு சேர்த்துக் கட்டும் கயிறாம்.

கொல்யானைக் கோடும் குணமிலியும், எல்லில்
பிறன்கடை நின்றுஒழுகு வானும், - மறந்தெரியா(து)
ஆடும்பாம்பு ஆட்டும் அறிவிலியும் இம்மூவர்
நாடுங்கால் தூங்கு பவர். 20

ஆசை பிறன்கட் படுதலும், பாசம்
பசிப்ப மடியைக் கொள லும், - கதித்துஒருவன்
கல்லான்என்(று) எள்ளப் படுத லும் இம்மூன்றும்
எல்லார்க்கும் இன்னா தன. 21

வருவாயுள் கால்வழங்கி வாழ்தல்; செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை; - எய்தப்
பலநாடி நல்லவை கற்றல்; இம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். 22

பற் று)என்னும் பாசத் தளையும், பலவழியும்
பற்(று)அறாது ஓடும் அவாத்தேரும், — தெற்றெனப்
பொய்த்துரை என்னும் பகைஇருளும் இம்மூன்றும்
வித்(து)அற வீடும் பிறப்பு. 23

தானம் கொடுக்கும் தகைமையும், மானத்தால்
குற்றம் கடிந்த ஒழுக்கமும்—தெற்றெனப்
பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை ஆர்க்கும் கயிறு. 24

25. தோற்றப் பொலிவுமிக்க மெல்லிய தோள்களை யுடைய வேசியின் இனிய மொழியும், தூண்டிலின் முள் உள்ளே மறையுமாறு (மீனுக்கு இரையாகப்) பொதிந்து வைக்கப்பட்ட தேரையும், அளவு கடந்த மனவேற்றுமை கொண்டுள்ள பகைவருடைய மாட்சிமைப்பட்ட வணக்கமும் ஆகிய இம்மூன்றும் உயிர்களைத் தன்னுள்ளே அழுந்தச் செய்கின்ற சேறு போன்றதாம்.

26. இறுமாப்பினால் (முறைகெடச் செய்து) வாழு கின்ற சிறியவனும், பரந்து அகன்ற அல்குலை விலைக்கு விற்கின்ற ஆராய்ந்தெடுத்த வளையலணிந்த வேசையும், நல்லவர்க்காக வைக்கப்பட்ட அறச்சாலையைத் தனக்காகக் கைப்பற்றிக் கொண்டவனும் ஆகிய இம்மூவருடைய கைகள் வழங்கும் பொருளை அறிவுடையார் உண்ணமாட்டார்.

27. விருந்தோம்புபவனால் கொடுக்கக் கூடியதை அறிந்து அதனை ஏற்று இன்புறும் விருந்தினனும், அரிய உயிரைப் பிறர் கொல்லுவதை இடையிலே புகுந்து தடுத்து நிறுத்தி வாழ்பவனும், உறுதியாக மேற்கொண்ட ஒழுக்கப் பண்புகளை இனிதாய்ப் பற்றி நிற்கும் ஆசிரியனும் ஆகிய இம்மூவரும் உலகம் (அதாவது உயர்ந்தோர்) என்று சொல்லப்படுவர்.

28. உண்ணுதற்குரிய வேளையில் குளித்து உண்ணு தலும், எவ்வளவு பெரும்பயனைத் தருவதாயிருந்தாலும் ஒரு பக்கம் சார்ந்து ஒரம் சொல்லாதிருத்தலும். பசியால் உடம்பு வற்றி இறப்பதாயிருந்தாலும் தன் பெருமை குறையாமல் நடத்தலும் ஆகிய இம்மூன்றும் தாம் தூயவராக இருக்க வேண்டும் என்று கருதுவாருடைய செயல்களாம்.

29. வெற்றி கொள்வதை விரும்பிப் பிறனோடு வெகுண்டு பேசுகின்ற தவமில்லாதவனும், தனக்குக் கிடைத்தற்கரிய பொருளைப்பெற ஆசைப்பட்டு இருப்ப வனும், பிறர் கற்ற கல்வியைக் கேள்வியால் குற்றம் பார்த் திருக்கின்றவனும் (அதாவது ஒருவன் கற்ற கல்வியை ஆராயாது கேட்டது கொண்டு குற்றம் கூறுதலும்) ஆகிய இம்மூவரும் உமியைக் குற்றி (அரிசி கிடைக்காமையால்) கை வருந்தும் (அறிவிலிகள்) ஆவர்.

காண்தகு மென்தோள் கணிகைவாய் இன்சொல்லும்,
தூண்டிலின் உள்பொதிந்த தேரையும்,—மாண்டசீர்க்
காழ்த்த பகைவர் வணக்கமும் இம்மூன்றும்
ஆழ்ச்சிப் படுக்கும் அளறு. 25

செருக்கினால் வாழும் சிறியவனும், பைத்(து) அகன்ற
அல்குல் விலைபகரும் ஆய்தொடியும்,—நல்லவர்க்கு
வைத்த அறப்புறம் கொண்டானும் இம்மூவர்
கைத்துண்ணார் கற்றறிந் தார். 26

ஒல்வ(து) அறியும் விருந்தினனும், ஆருயிரைக்
கொல்வ(து) இடைநீக்கி வாழ்வானும்,—வல்லிதின்
சீலம் இனிதுடைய ஆசானும் இம்மூவர்
ஞாலம் எனப்படு வார். 27

உண்பொழுது நீராடி உண்டலும், என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்,—தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில். 28

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்,
இல்லது காமுற்(று) இருப்பானும்,—கல்விச்
செவிக்குற்றம் பார்த்(து)இருப் பானும்இம் மூவர்
உமிக்குற்றிக் கைவருந்து வார். 29

30. ஒரு பெண் தன்னை விரும்பித் தன் பின்னே தொடர்ந்தாலும் தான் தன் ஒழுக்கத்தில் குன்றாமையும், தன்னிடம் தேடி வந்து கைப்பட்டாலும் பிறன் பொருளிடத்தே ஆசை இல்லாமையும், மண்ணாசை கொண்டு வாழும் வாழ்வை விரும்பி மதியாமையும் ஆகிய இம்மூன்றும் நுட்பமான பொருளை விரும்பும் நூலறிவுடையார் கருத்தாம்.

31. தன்னை விரும்பி அடைந்த ஒருவரை இகழாத ஒருவனும், மிகுந்த செல்வம் வந்தக் காலத்தும் மறதியை நீக்கினவனும் (அதாவது எளியோரை மறவாதவனும்), (பிறர் செல்வம் கண்டு) பொறாமை கொள்ளுவதிலிருந்து எப்போதும் நீங்கினவனும் ஆகிய இம்மூவரும் நிலைபெற்ற புகழை உடையவர் ஆவர்.

32. பல நூல்களில் நல்லனவற்றைத் தேர்ந்து அவற்றைக் கற்றலும், பகுத்துண்டு இல்லறத்தைக் குறைவு படாமல் நடத்தலும், தன் வல்லமையாலும் முயற்சியாலும் செய்தற்கரிய செய்கையைச் செய்து முடித்தலும் ஆகிய இம் மூன்றும் நல்லோர் சொல்லிக் கேட்கப்பட்டுள்ள நற்பண்புகளுள் எல்லாம் தலையாய பண்புகளாம்.

33. (நூல்களில்) நயமான சொற்களை ஆராய்ந்து நுட்பமாகப் பொருள் கொள்ளுதலும், நூலோடு பொருந்தாத பயனற்ற சொற்களைப் பிறர் வேண்டினாலும் சொல்லாதிருத்தலும், கற்ற உறுதியான மொழிகளைக் கீழ் மக்கள் அல்லாதாரிடத்துச் சொல்லுதலும் ஆகிய இம் மூன்றும் கற்றறிந்தார் மேற்கொண்ட கடமைகள் ஆகும்.

34. தன் நல்லாட்சிக்கு அடங்கி வாழ்கின்ற குடி மக்களும், அக்குடிகளைத் தழுவி ஆலம் விழுதுபோலத் தாங்கவல்ல அமைச்சனும், வேலினிடத்துள்ள பூண்போல வன்மையை உடையான் தன்னைக் காத்தலும் ஆகிய இம் மூன்றிலும் படைவலிமை மிக்க அரசன் பற்றுவிடாது ஒழுக வேண்டும்.

பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றாமை
கண்விழைந்து கைஉறினும் காதல் பொருட்(கு) இன்மை,
மண்விழைந்து வாழ்நாள் மதியாமை இம்மூன்றும்
நுண்விழைந்த நூலவர் நோக்கு. 30

தன்நச்சிச் சென்றாரை எள்ளா ஒருவனும்,
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்,
என்றும் அழுக்கா(று) இகந்தானும் இம்மூவர்
நின்ற புகழுடை யார். 31

பல்லவையுள் நல்லவை கற்றலும்,பாத் (து)உண்டுஆங்கு
இல்லறம் முட்டாது இயற்றலும்,—வல்லிதின்
தாளில் ஒருபொருள் ஆக்கலும் இம்மூன்றும்
கேள்வியுள் எல்லாம் தலை. 32

நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும், நூற்குஏலா
வெண்மொழி வேண்டிடினும் சொல்லாமை,—
நன் மொழியைச்
சிற்றினம் அல்லார்கண் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன். 33

கோல்அஞ்சி வாழும் குடியும், குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்,—வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும்இம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். 34

35. மூன்று வகைப்பட்ட கடன்களையும் (தேவர், முனிவர், தென்புலத்தார் என்று மூவர்க்கும் செய்ய வேண்டிய கடன்களையும்) செய்து முடித்த பார்ப்பானும், ஆராய்ந்து செய்யும் (நீதி நிலையில் மாறுபடாத) அரசனும், சிறையினுட்பட்டுப் புலம்புதல் இல்லாத குடிகளும் ஆகிய இம்மூவரும் உயர்ந்தோர் (உலகத்தார்) என்று சொல்லப்படுவர்.

36. கடலலைபோல எழுந்து பொங்காத அமைதியான அறிவுடையவனும், நுண்ணிய சிந்தனையாலும் மிகுந்த கேள்வியினாலும் நூல்களின் முடிவைக் கண்டவனும், குற்றத்தன்மை இல்லாமல் ஆசைமயக்கினை நீக்குபவனும் ஆகிய இம்மூவரும் உண்மைத் தன்மையில் நின்று ஒழுகுபவராவர்.

37. ஒன்றனுடைய ஊனைத் தின்றுகொண்டு உயிர்களிடத்து அருளுடையவன் என்று தன்னைச் சொல்பவனும், தான் யாதொரு முயற்சியும் செய்யாமல் எல்லாம் ஊழ் செய்யும் என்று வாளா இருப்பவனும், தான் செய்ய விரும்பிய வேள்வியின் பொருட்டு ஒன்றனைக் கொல்வானும் ஆகிய இம்மூவரும் தாங்கள் அறிந்ததையே அறிவென்பார்கள். (உண்மையை அறிய மாட்டார்கள்).

38. ஒருவனது செல்வச் சுருக்கத்தில் (அதாவது வறுமைக் காலத்தில்) நண்பனுடைய நட்பின் அளவு காணப்படும். பொருந்துதற்கு இனிய நற்பண்பு நிறைவினால் உயர் குடிப் பிறப்பின் தன்மை காணப்படும். பால் போன்ற (மறு வற்ற மனமொழி மெய்களின்) தூய்மையினால் ஒருவனுடைய நிலை தோன்றும். இம்மூன்றும் உண்மை உடையவர்களுடைய ஒழுக்கங்களாம்.

39. தன்னைத்தானே மெச்சிக் கொண்டு தருக்கித் திரிதலும், அடக்கமில்லாமல் வீணாகச் சினத்தை வளர்த்தலும், தான் நினைத்த பல்வகைப் பொருள்களையும் தானே துய்க்க விரும்புகின்ற சிறுமைக்குணமும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுடைய செல்வத்தை அழிக்கும் கருவிகளாம்.

மூன்று கடன்கழித்த பார்ப்பானும், ஓர்ந்து
முறைநிலை கோடா அரசும்,—சிறைநின்(று)
அலவலை இல்லாக் குடியும்இம் மூவர்
உலகம் எனப்படு வார். 35

முந்நீர்த் திரையின் எழுந்தியங்கா மேதையும்,
நுண்ணூல் பெருங்கேள்வி நூல்கரை கண்டானும்,
மைந்நீர்மை இன்றி மயல்அறுப்பான் இம்மூவர்
மெய்ந்நீர்மை மேல்நிற் பவர். 36

ஊன்உண்(டு) உயிர்கட்(கு) அருளுடையேம் என்பானும்
தான்உடன்பா(டு) இன்றி வினைஆக்கும் என்பானும்,
காமுறு வேள்வியில் கொல்வானும் இம்மூவர்
தாம்அறிவர் தாம்கண்ட வாறு. 37

குறளையுள் நட்(பு)அளவு தோன்றும்; உறல்இனிய
சால்பினில் தோன்றும் குடிமையும்;—பால்போலும்
தூய்மையுள் தோன்றும் பிரமாணம்; இம்மூன்றும்
வாய்மை உடையார் வழக்கு. 38

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றுஞ்
செல்வம் உடைக்கும் படை. 39

40. பொருளை விரும்பும் வேசையரை விரும்பிக் கூடுதல் இழிதன்மையோடு கலப்பதாகும்; விரும்பிக் கள்ளுண்டு வாழ்தல் எச்சில் கலத்தோடு கலப்பதாகும்; சூதாடி வாழ்தல் பெரியோர் சொல்லும் சொற்களை வெறுத்துப் பொய்யோடு கலப்பதாகும். இம்மூன்றும் நன்மை இல்லாதார் தொழில்களாம்.

41. (மனத்தில் தோன்றும்) வெகுளியை அடக்கும் வல்லமையும், குலப்பெண்டிர்க்கொத்த ஒழுக்கமுடைய வனாக இருத்தலும், பகுத்துண்ணும் நல்ல அறிவாண்மை யைப் பொருந்துதலும் ஆகிய இம்மூன்றும் மூதறிவுடையார் தொழில்களாம்.

42. வறுமையால் துன்புற்றவர்க்கு ஒன்றைக் கொடுத்த லால் உண்டாகிய புகழும், தளர்ச்சியுற்ற காலத்திலும் தன் குடிப்பிறப்பிற்குரிய பண்புகளிலிருந்து வழுவாத இயல்பும், அன்பு மிகுந்து நாள்தோறும் நண்பர்களை மிகுதியாகப் பெருக்கிக் கொள்ளுதலும் ஆகிய இம்மூன்றும் கேள்விப்படும் அறங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்தனவாம்.

43. சூதாட்டத்தில் கிடைத்த பொருளை விரும்பா திருத்தலும், பலநாள் பழகினாலும் பார்ப்பாரிடம் தீயைப் போல அஞ்சி நடந்துகொள்ளுதலும், உழவுத்தொழிலை விரும்பியேற்று நடத்தி வாழ்தலும் ஆகிய இம்மூன்றும் வேளாண்மைக் குடியில் பிறந்தவர்க்கு அழகென்று சொல்லுவர்.

44. வாக்கினால் அடங்கியிருத்தல் மிகப்பெரிய செல்வ மாகும். குற்றமற்ற நற்செயல்களைச் செய்யும்போதும் அடங்கியிருத்தல் மிகவும் மேன்மையாகும். பொய்யில்லாமல் மனத்தால் அடங்கியிருத்தல் வீடுபேறு தருவதாகும். இம் மூன்றும் வஞ்சனையினின்று நீங்கிய நற்பொருள்களாம்.

புலைமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டிர்த் தோய்தல்;
கலமயக்கம் கள்ளுண்டு வாழ்தல்;—சொலைமுனிந்து
பொய்மயக்கம் சூதின்கண் தங்குதல்; இம்மூன்றும்
நன்மைஇ லாளர் தொழில். 40

வெகுளி நுணுக்கும் விறலும், மகளிர்கட்(கு)
ஒத்த ஒழுக்கம் உடைமையும்,—பாத்துண்ணும்
நல்லறி வாண்மை தலைப்படலும் இம்மூன்றும்
தொல்லறி வாளர் தொழில். 41

அலந்தார்க்(கு)ஒன்(று) ஈந்த புகழும், துளங்கினும்
தன்குடிமை குன்றாத் தகைமையும்,—அன்போடி
நாள்நாளும் நட்டார்ப் பெருக்கலும் இம்மூன்றும்
கேள்வியுள் எல்லாம் தலை. 42

கழகத்தால் வந்த பொருள்கா முறாமை,
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்,
உழவின்கட் காமுற்று வாழ்தல்இம் மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு. 43

வாயின் அடங்குதல் துப்புரவுஆம்; மாசற்ற
செய்கை அடங்குதல் திப்பியமாம்;—பொய்யின்றி
நெஞ்சம் அடங்குதல் வீடுஆகும்; இம்மூன்றும்
வஞ்சத்தில் தீர்ந்த பொருள். 44

45. விருந்தினர் இல்லாமையால் தனித்து உண்ட பகற் பொழுதும், திருந்திய அணிகலன்களையுடைய குல மகளிரைத் தழுவிக்கழியாத இரவும், வறியார்க்கு ஒன்றைக் கொடாது கழிந்த காலைப்பொழுதும் ஆகிய இம்மூன்றும் அறிவுடையார்க்கு (நாடோறும்) துன்பந்தருவனவாம்.

46. ஒன்றைச் செய்யும் ஆற்றல் இல்லாதவனை அதனைச் செய்யென்று வற்புறுத்தி வருத்துகின்றவனும், தன்னிடம் வந்து இரந்தவர்க்குத் தன்னால் இயன்றதைக் கொடுக்கும் அன்பில்லாமல் மறைத்து வைக்கின்றவனும், கூற்றுவன் வருவது திண்ணம் என்று எண்ணி உணராத வனும் ஆகிய இம்மூவரும் நரகத்தில் சென்று வீழ்வர்.

47. நடைச் சிறப்பு இல்லாத குதிரையும், கட்டுத் தறியை முறிப்பதும் எவரும் மேலேறிச் செல்வதற்கு முடியாததுமான கொடிய ஆண் யானையும், (மாணவரிடம்) சீறி முகம் திரிந்து சினத்துடன் பாடம் சொல்வானுடைய கல்விச்சாலையும் ஆகிய இம்மூன்றினையும் அறிவுடையோர் சென்று சேரார்.

48. மென்மையான மொழியையும் பெரிய தோள் களையும் உடைய மகளிரும், பலவகையாலும் முயற்சியால் ஈட்டிய சிறந்த பொருளும், நாள்தோறும் நாச்சுவை யேறும்படி ஆக்கப்பட்ட உணவும் ஆகிய இம்மூன்றும் முறைப்படிக் காத்தலினின்றும் கைவிடக்கூடாத பொருள் களாம். (காப்பாற்றாமல் போனால் கெட்டுப்போம் என்பது கருத்து).

49. ஒருவன் வைத வசவை இனியனவாக ஏற்றுக் கொள்கின்றவனும், நெய்ச்சோறென்று தனக்குக் கிடைத்த கூழை மதிக்கின்றவனும், மிகுந்த கசப்பு உணவை இனிக்கும் வெல்லக் கட்டியென்று உண்ணுகின்றவனும் ஆகிய இம் மூவரும் பொருள்களின் உண்மைத்தன்மையை உணர்ந்து வாழ்பவராவர்.

விருந்தின்றி உண்ட பகலும், திருந்திழையார்
புல்லப் புடைபெயராக் கங்குலும்,—இல்லார்க்குஒன்று
ஈயா(து) ஒழிந்தகன்ற காலையும் இம்மூன்றும்
நோயே உரன்உடை யார்க்கு. 45

ஆற்றானை ஆற்றென்(று) அலைப்பானும், அன்பின்றி
ஏற்றார்க்(கு) இயைவ கரப்பானும்,—கூற்றம்
வர(வு)உண்மை சிந்தியா தானும் இம்மூவர்
நிரையத்துச் சென்றுவீழ் வார். 46

கால்தூய்மை இல்லாக் கலிமாவும், காழ்கடிந்து
மேல்தூய்மை இல்லாத வெங்களிறும்,—சீறிக்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளியும்இம் மூன்றும்
குறுகார் அறிவுடை யார். 47

சில்சொல் பெருந்தோள் மகளிரும், பல்வகையும்
தாளினால் தந்த விழுநிதியும்,—நாடொறும்
நாத்தளிர்ப்ப ஆக்கிய உண்டியும் இம்மூன்றும்
காப்(பு)இகழல் ஆகாப் பொருள். 48

வைததனை இன்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்,—ஊறிய
கைப்(பு)அதனைக் கட்டியென்று உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 49

50. 'செய்' என்று ஏவியதை 'முடியாது' என்று மறுக்கும் மக்களும், நாவைக் காவாது (வாயில் வந்தபடி) திட்டி இகழ்ந்து சொல்லுகின்ற இல்லத் தலைவனும், பொய்யையே அலசி எடுத்துக்கூறி வீட்டுப் பொருளை அழிக்கும் மனைவியும் ஆகிய இம்மூவரும் இப்பிறப்பில் எவர்க்கும் பயன்படாதவர் ஆவார்.

51. கொள்ளும் வரிப்பொருளையே விரும்பிக் குடிகளை வருத்துகின்ற அரசனும், உண்மையைச் சொல்லாமல் பொய் சொல்லுகின்ற மனிதரும், வீட்டில் இருந்து கொண்டே தன் வரம்பு கடந்து நடக்கின்ற மனைவியும் ஆகிய இம்மூவரும் உடனே மழையைக் குறைக்கின்ற கோள்களாம்.

52. வருவாய் அடைபட்டு ஒருவன் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறபோதும் சுற்றத்தார் துணையாகவே இருப்பர்; மனம் கலந்து பழகிய இடத்தும் பகைவர் பகைவரேயாவர்; துன்பம் செய்யும் குணமுடைய கீழ் மக்கள் பிளக்கப்பட்ட கல்லைப்போல (ஒன்றுகூடாத) தன்மை உடையவராவர். இம்மூவரையும் ஆராய்ந்தால் பொருளின் உண்மைத்தன்மை புலப்படும்.

53. கண்ணுக்கு அணிகலமாவது கண்ணோட்டம் உடைமை; கணவனால் விரும்பப்படுகிற பெண்ணுக்கு அணிகலமாவது நாணம் உடைமை; சென்றெய்தும் வீடு பேற்றிற்கு அணிகலமாவது கல்வி. இம்மூன்றும் அறிவுடையாரிடத்தே உள்ளனவாம்.

54. குருடனுடைய மனைவியின் அழகும், மயக்கமற நூல்களைக் கற்று அறிதலில்லாதவன் விரைந்து சொல்லும் சொல்லும், (பல்வேறு இசைக் கூறுபாடுகள் உடைய) பண்களைப் பற்றிய அறிவில்லாதவன் யாழின் இசையைக் கேட்டலும் ஆகிய இம்மூன்றும் ஆராயுமிடத்து முறையே அம்மூவர்க்கும் விளங்காத பொருள்களாம். (அவை பயனற்றவையாகும்).

ஏவியது மாற்றும் இளங்கிளையும், காவாது
வைதுஎள்ளிச் சொல்லும் தலைமகனும், —பொய்தெள்ளி
அம்மனை தேய்க்கும் மனையாளும் இம்மூவர்
இம்மைக்(கு) உறுதி இலார். 50

கொள்பொருள் வெஃகிக் குடிஅலைக்கும் வேந்தனும்,
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்,
இல்இருந்(து) எல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழையருக்கும் கோள். 51

தூர்ந்(து)ஒழுகிக் கண்ணும் துணைகள் துணைகளே;
சார்ந்(து)ஒழுகிக் கண்ணும் சலவர் சலவரே;
ஈர்ந்தகல் இன்னாக் கயவர்; இவர்மூவர்
தேர்ந்தக்கால் தோன்றும் பொருள். 52

கண்ணுக்(கு) அணிகலம் கண்ணோட்டம்; காமுற்ற
பெண்ணுக்(கு) அணிகலம் நாணுடைமை;—நண்ணும்
மறுமைக்(கு) அணிகலம் கல்விஇம் மூன்றும்
குறியுடையார் கண்ணே உள. 53

குருடன் மனையாள் அழகும், இருள்தீரக்
கற்றறி வில்லான் கதழ்ந்துரையும், —பற்றிய
பண்ணில் தெரியாதான் யாழ்கேட்பும் இம்மூன்றும்
எண்ணில் தெரியாப் பொருள். 54

55. ஒருவன் தனக்கு வரும் பயனை ஆராய்ந்து அதற்கு உதவாதவரை அடுத்து வாழ்தலும், ஒருவன் வெகுளியோடு இருக்கும்போது பயன்படாமற் போவனவாகிய நல்ல உறுதி மொழிகளை (அவனிடம்) சொல்லுதலும், பின்னே பயன் படுதலில்லாத (அதாவது மெய்ப்பிக்க முடியாத) குற்றங் களைப் பிறர்மேற் சொல்லுதலும் ஆகிய இம்மூன்றும் தெளிவில்லார் செயல்களாகும்.

56. பிறர்க்கு வெளிப்படுத்தக் கூடாத மந்தணப் பொருளை (அதாவது இரகசியத்தை)க் காப்பாற்றாத நண்பனும், பெருமைக் குணத்தை விரும்பாது அதனின்று நீங்கிய பெண்ணும், எவ்விடமாயினும் வெகுண்டு குதிக்கின்ற குற்றேவலனும் ஆகிய இம்மூவரும் (உள்ளொற்றிப் பிறர்க்கு உரைக்கும்) ஒற்றர் எனப்படுவார்.

57. ஒருவன் இளமைப் பருவத்திலேயே கல்வி அறிவைப் பெறலும், அதன்பின்பு அக்கல்விப் பொருளை உணர்ந்து தந்தையையும் தாயையும் வழிபடுதலும், தாம் வந்த குடியொழுக்கமாகிய பெருநெறியை வழுவாது ஒழுகுதலும் ஆகிய இம்மூன்றும் உயர்வைத் தரும் வழியை அடைக்கா தவைகளாம்.

58. தாளம் கொட்டும் அளவிற்குத் தக்கவாறு அமை யாத பாடலும், பிறர்வீட்டுக் கதவைத் தட்டிச் சோற்றுப் பிச்சை வாங்கி உண்பவன் ஆரவாரித்தலும், ஒண்டுக்குடி இருப்போன் நாள்தோறும் பிறருடன் சண்டையே விரும்புதலும் ஆகிய இம்மூன்றும் இன்னாதனவென்று நாம் கேட்டனவற்றுள் எல்லாம் மிகவும் இன்னாதனவாம்.

59. நெடுங்காலம் பழகி வந்ததை நினைந்து நண்பர் களைக் காப்பாற்றுதல், சுற்றத்தார் மகிழும்படி உரிமை யோடு அவர்களைத் தழுவிக் கொள்ளுதல், தனக்கு உறவின ராகும்படி இனிய சொற்களால் நல்லினத்தைச் சேர்த்தல் ஆகிய இம்மூன்றும் இளைஞருடைய தொழில்களாய் இருக்க வேண்டும்.

தன்பயன் தூக்காரைச் சார்தலும், தான்பயவா
நன்பயன் காய்வின்கண் கூறலும்,—பின்பயவாக்
குற்றம் பிறர்மேல் உரைத்தலும் இம்மூன்றும்
தெற்றென இல்லார் தொழில். 55

அருமறை காவாத நட்பும், பெருமையை
வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும்,—யாண்டானும்
செற்றம்கொண் டாடும் சிறுதொழும்பும் இம்மூவர்
ஒற்றாள் எனப்படு வார். 56

முந்தை எழுத்தின் வரவுணர்ந்து, பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபட்டு,—வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்தல்இம் மூன்றும்
விழுப்ப நெறிதூரா ஆறு. 57

கொட்டி அளந்தமையாப் பாடலும், தட்டித்துப்
பிச்சைபுக்கு உண்பான் பிளிற்றலும்,—துச்சிருந்தான்
நாளும் கலாம்கா முறுதலும் இம்மூன்றும்
கேள்வியுள் இன்னா தன. 58

பழமையை நோக்கி அளித்தல், கிழமையால்
கேளிர் உவப்பத் தழுவுதல், —கேளிராய்த்
துன்னிய சொல்லால் இனந்திரட்டல் இம்மூன்றும்
மன்னர்க்(கு) இளையான் தொழில். 59

60. சுற்றத்தார்க்கு உதவாதவனுடைய செல்வமும், பசிய பயிர்களை அவை விளைந்து பயன்தரும் காலத்தில் பாதுகாக்காதவனுடைய உழுதொழிலும், இளமைப் பருவம் உடையவனாய் இருந்தும் கள்ளுண்டு வாழ்கின்றவனுடைய குடிப் பிறப்பும் ஆகிய இம்மூன்றும் நிலை நிற்பனபோலத் தோன்றிப் பின் அழிவனவாம்.

61, பேய்த் தன்மையான பிறப்புடையவர்களுக்குப் பெரும் பசியால் துன்பமுண்டாகிறது; பாயும் இயல்புடைய விலங்குத் தன்மையான பிறப்புடையவர்களுக்கு அச்சத்தால் துன்பமுண்டாகிறது; அறிவை உணராத மனிதப் பிறப்புடையவர்களுக்கு வறுமையால் துன்பம் உண்டாகிறது. இம்மூன்றும் துன்பத்தைத் தரும் பிறப்புகளாம்.

62. ஐம்பொறி அறிவுகளும் தமக்கு அடங்கி நிற்கும் வகையில் நடத்தலும், பின்னர் வரவிருக்கும் துன்பத்தை வராதபடி முன்னரே அறிந்து தடுத்தலும், பகைமை கொண்ட அரசர்களுடைய நிலையை நாடோறும் அறிந்து கொள்ளுதலும் ஆகிய இம்மூன்றும் சிறப்பமைந்த பேரமைச்சர்களின் செயல்களாம்.

63. ஒருவன் தனக்குச் செய்த நன்றியின் பயனை எண்ணிப் பாராத நாணம் இழந்தவனும், சான்றோர் முன்னே அவையில் கொடிய சொற்களைக் கூறுபவனும், நற் செய்கை இல்லாமல் ஒருவன் வைத்த அடைக்கலப் பொருளைக் கைப்பற்றிக் கொள்பவனும் ஆகிய இம்மூவரும் கிடைத்த புகழையும் இழந்து வருந்தி வாழ்வார்.

64. தனக்கு வரும் துன்பத்திற்கு அஞ்சாதவரோடு ஒருவன் கொண்ட நட்பும், விருந்தினரை ஓம்ப மறுக்கும் மனைவியை வீட்டில் வைத்திருத்தலும், பெருமை தராத குணத்தையுடையவர்களுக்குப் பக்கத்தில் குடியிருத்தலும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்கு நன்மையை உண்டாக்குதல் இல்லை.

கிளைஞர்க்(கு) உதவாதான் செல்வமும், பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்,—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 60

பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும், பாஅய்
விலங்கின் பிறப்பின் வெரூஉம்,—புலந்தெரியா
மக்கட் பிறப்பின் நிரப்பிடும்பை இம்மூன்றும்
துக்கப் பிறப்பாய் விடும். 61

ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்,
எய்துவது எய்தாமை முற்காத்தல்,—வைகலும்
மாறுஏற்கும் மன்னர் நிலைஅறிதல் இம்மூன்றும்
வீறுசால் பேரமைச்சர் கோள். 62

நன்றிப் பயன்தூக்கா நாணிலியும், சான்றோர்முன்
மன்றில் கொடும்பா(டு) உரைப்பானும்,—நன்றுஇன்றி
வைத்த அடைக்கலம் கொள்வானும் இம்மூவர்
எச்சம் இழந்துவாழ் வார். 63

நோவுஅஞ்சா தாரோடு நட்பும், விருந்துஅஞ்சும்
ஈர்வளையை இல்லத்(து) இருத்தலும்,—சீர்பயவாத்
தன்மைஇ லாளர் அயல்இருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல. 64

65. விருந்தினர்களைப் பேணுவதில் நட்பினளாயும்' நாள்தோறும் மனையறம் காத்து நடத்துவதில் பெற்ற தாயாயும், தன் குடியின் தொன்மைக்கு ஏற்ற மக்களைப் பெறுவதில் மனைவியாயும் இருக்கின்ற இம்மூன்று தன்மை களும் கற்புடையவள் கொண்ட கடமைகளாம்.

66 அலைகடல்போல் அளவில்லாத அச்சம் தன் னுள்ளத்தே தோன்றுதலும், அன்பு செலுத்தியவற்றை விட்டு நீங்க முடியாத பெருவிருப்பமும், பெரியோர்களால் உறுதியாகக் கொள்ளப்பட்ட உண்மை நிலையைக் காண முடியாத வெகுளியும் ஆகிய இம்மூன்றும் (ஆடு முதலானவை) தம்மிடத்தில் பிறந்த நெய்யிலே தாமே பொறியுமாறு போலத் தம்மிடத்தே பிறந்து தம்மையே வேகச் செய்வனவாம்.

67. கணவனை இழந்தவளது களங்கமும், தன் ஏவல் வழி நிற்கின்ற சிற்றாட்களை இல்லாதவன் அணியும் மோதிரமும், தான் ஏந்திய செங்கோல் வளையும்படியாக வாழ்கின்ற அரசும் ஆகிய இம்மூன்றும் நிறைவோடு பொருந்திய சிறப்புடையன அல்லவாம்.

68. எதிர்த்துப் பேசும் மனையாளும், ஒழுக்கமில்லாத ஏவலாளும், குற்றம்புரியும் மனத்துடன் கூடிய சுற்றமும் ஆகிய இவை மூன்றும் முற்காலத்தில் செய்த பழவினைப் பயனாக நின்று மயிர் நரைத்து முதுமைப்பருவம் அடையு மளவும் ஒருவனை வருத்தும். அதனால் இவை மூன்றாலும் மனம் நொந்தார் செய்யக்கூடியதாகிய கழுவாய் இல்லை.

69. வறியார்க்கு வேண்டிய ஒன்றைக் கொடுக்கும் செல்வமுடைமையும், உலகப் பொருள்களின் நிலையா மையை அறிகின்ற நெறிமுறையும், எந்த உயிர்க்கும் துன்பம் தருவனவற்றைச் செய்யாத மனத்தூய்மையும் ஆகிய இம்மூன்றும் நல்லனவற்றை அறிகின்ற மக்களிடம் என்றும் இருப்பனவாம்.

நல்விருந்(து) ஓம்பலின் நட்டாளாம்; வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய்;—தொல்குடியின்
மக்கட் பெறலின் மனைக்கிழத்தி; இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன். 65

அச்சம் அலைகடலின் தோன்றலும், ஆர்வுற்ற
விட்(டு) அகல கில்லாத வேட்கையும்,—கட்டிய
மெய்ந்நிலை காணா வெகுளியும் இம்மூன்றும்
தந்நெய்யிற் தாம்பொரியு மாறு. 66

கொழுநனை இல்லாள் கறையும், வழிநிற்கும்
சிற்றாள்இல் லாதான்கைம் மோதிரமும்,—பற்றிய
கோல்கோடி வாழும் அரசனும் இம்மூன்றும்
சால்போடு பட்ட(து) இல. 67

எதிர்நிற்கும் பெண்ணும், இயல்(பு)இல் தொழும்பும்,
செயிர்நிற்கும் சுற்றமும் ஆகி,—மயிர்நரைப்ப
முந்தைப் பழவினையாய்த் தின்னும் இவைமூன்றும்
நொந்தார் செயக்கிடந்த(து) இல். 68

இல்லார்க்குஒன்று ஈயும் உடைமையும், இவ்வுலகில்
நில்லாமை உள்ளும் நெறிப்பாடும், எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றுஅறியும் மாந்தர்க்(கு) உள. 69

70. செய்தற்கரிய தொழில்களைச் செய்கின்ற எருதும், செம்மையாக உடலுறுப்பிலக்கணம் நிரம்பியிருந்தும் நெடு நாள் திருமணமின்றி இருந்த இளம்பெண்ணும், பசித் துன்புற்று வழிதப்பி வந்த விருந்தும் ஆகிய இம்மூன்றும் பெறுதற்கு அரிய பொருள்களாம்.

71. அறச்செயலாகச் சோலையுடன் கூடிய குளத்தினைத் தோண்டியவனும், நாவினால் வேதங்களின் முடிவு கண்ட பார்ப்பானும், தனக்கு ஆகாததை நீக்கிப் பொருந்துவதனைப் பகுத்து உண்ணுகின்ற ஒருவனும் ஆகிய இம்மூவரும் செல்வத்தையுடையவர்களாவர்.

72. உடுத்திய ஆடை இல்லாமல் நீராடுதலும், பெண்கள் வழக்குத் தொடுத்து அவையிடத்தே சொற் போர் செய்யப் புகுதலும், பிறர்க்குக் கொடுத்துக் காப் பாற்றுகின்ற ஆண்மையுடையவரது வறுமையும் ஆகிய இம்மூன்றும் என் கண்கள் பார்க்கத் தகுவன அல்ல.

73. போதுமென்ற மனமுடையவனைக் கண்டு வறுமை அஞ்சும்; அறத்தையே நினைந்து இருப்பவனைக் கண்டு அறமல்லாத பாவம் அஞ்சும்; கொலையாளியைக் கண்டு எல்லா உயிரும் அஞ்சும். இம்மூன்றும் வேறுபாட்டில் நீங்கித் தம்முள் ஒத்த பொருள்களாம்.

74. பிறரிடம் பிச்சையெடுத்துப் பெற்றதைக் கொண்டு பெரும்பொருளை ஈட்டுவேன் என்று சொல்கிறவனும், பலரிடத்தும் பயின்று ஒழுகுகின்ற வேசையைத் தன்மேல் அன்புடையவள் என்று கருதுகின்றவனும், விரிந்த கட லிடத்து நீந்திச் செல்பவனும் ஆகிய இம்மூவரும் தமக்குக் கைகூடாத அரிய செயல்களைச் செய்யத்துணிந்து வாழ் கின்றவராவர்.

அருந்தொழில் ஆற்றும் பகடும், திருந்திய
மெய்ந்நிறைந்து நீ(டு)இருந்த கன்னியும்,—நொந்து
நெறிமாறி வந்த விருந்தும்இம் மூன்றும்
பெறுமா(று) அரிய பொருள். 70

காவோ(டு) அறக்குளம் தொட்டானும், நாவினால்
வேதம் கரைகண்ட பார்ப்பானும், — தீதுஇகந்து
ஒல்வதுபாத்(து) உண்ணும் ஒருவனும் இம்மூவர்
செல்வர் எனப்படு வார். 71

உடுத்துஆடை இல்லாத நீராட்டும், பெண்டிர்
தொடுத்துஆண்(டு) அவைப்போர் புகலும், — கொடுத்(து)
அளிக்கும்
ஆண்மை உடையவர் நல்குரவும் இம்மூன்றும்
காண அரியஎன் கண். 72

நிறைநெஞ்(சு) உடையானை நல்குரவு அஞ்சும்;
அறனை நினைப்பானை அல்பொருள் அஞ்சும்;
மறவனை எவ்வுயிரும் அஞ்சும்; இம்மூன்றும்
திறவதில் தீர்ந்த பொருள். 73

இரந்துகொண்டு ஒண்பொருள் செய்வல்என் பானும்,
பரந்(து)ஒழுகும் பெண்பாலைப் பாசம்என் பானும்,
விரிகடல் ஊடுசெல் வானும்,இம் மூவர்
அரிய துணிந்(து)ஒழுகு வார். 74

75. கொலைசெய்து ஒன்றன் இறைச்சியைத் தின்று வாழ்பவனும், தன்னிற் பெரியார் தன்னைத் தழுவும்போது தானும் அவரை எதிரேற்றுத் தழுவுகின்ற அறிவில்லாத வனும், என்னிடம் எதுவுமில்லை ஏதேனும் தருக என்று இரப்பவனை இகழ்ந்து நகையாடுபவனும் ஆகிய இம்மூவரும் யாதோர் அறத்தையும் கடைப்பிடிக்க இயலாதவர் ஆவர்.

76. வரையாது கொடுக்கும் தன்மையைத் தனக்கு அணியாகக் கொண்டவனிடத்துச் சேர்ந்த செல்வமும், உள்ளத்தே ஓர்ந்து உணரும் தன்மையுடையவன் கற்ற நூலும், பிறர் தன்னைச் சார்ந்தபோது அவர்க்குச் செய் யத்தக்கனவற்றை அறிகின்ற தலைமகனும் ஆகிய இம் மூவரும் பொந்தில்லாமல் வயிரம்பற்றிய மரம் போலத் திண்மையாகப் பயன்படுபவராவர்.

77. விதைப்புப் பணிமிகுந்திருக்கும் மழைப் பருவத்தில் வந்த விருந்தினரும், தன்மனம் வேறுபட்டு நிற்கப் பொருளைக் கவரும் தன்செயலில் குறைபடாத கணிகையும், போரில் தலைவன் சொல்லை மறுத்துச் சொல்லு கின்ற வீரனும் ஆகிய இம்மூவரும் பாதுகாத்தற்கு முடியா தவர் ஆவர்.

78. கீழ்மக்களைச் சேராமல் வாழ்தல், நீதியுடைய வரை நட்புக்கொண்டு நள்ளிரவிலும் விட்டு நீங்காது இருத் தல், பழிப்பிற்குரிய குற்றமான செயல்கள் தன்னிடம் வந்து சேராமல் காத்துக் கொள்ளுதல் ஆகிய இம்மூன்றும் குடிப் பிறப்பில் குற்றம் இல்லாதவர்களிடமே காணத்தக்கன வாம்.

79. மனத்தூய்மை உடையவனாயிருப்பது துணிவுடை மையாகும். கரவுத் தொழிலை நீக்கிடும் வாய்மை யுடையனாயிருப்பது அழகுடைமையாகும்; தீமையை மனத் தால் நினையாமலும் வாயாற் சொல்லாமலும் இருத்தல் அழகுடைமையாகும்; இவை மூன்றும் தவத்திலே செருக்கி நிற்கிறவர்களுடைய கொள்கையாம்.

கொலைஇன்று தின்(று)ஒழுகு வானும், பெரியவர்
புல்லும்கால் தான்புல்லும் பேதையும்,—இல்எனக்(கு)
ஒன்(று)
ஈ(க)என் பவனை நகுவானும் இம்மூவர்
யாதும் கடைப்பிடியா தார். 75

வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும், உள்ளத்(து)
உணர்வுடையான் ஓதிய நூலும்,—புணர்வின்கண்
தக்க(து) அறியும் தலைமகனும் இம்மூவர்
பொத்துஇன்றிக் காழ்த்த மரம். 76

மாரிநாள் வந்த விருந்தும், மனம்பிறிதாய்க்
காரியத்திற் குன்றாக் கணிகையும்,—வீரியத்து
மாற்றம் மறுத்துரைக்கும் சேவகனும் இம்மூவர்
போற்றற்(கு) அரியார் புரிந்து. 77

கயவரைக் கைஇகந்து வாழ்தல், நயவரை
நள்இருளும் கைவிடா நட்(டு)ஒழுகல்,—தெள்ளி
வடுவான வாராமல் காத்தல்இம் மூன்றும்
குடிமா(சு) இலார்க்கே உள. 78

தூய்மை உடைமை துணிவாம்; தொழில்அகற்றும்
வாய்மை உடைமை வனப்பாகும்;—தீமை
மனத்தினும் வாயினும் சொல்லாமை மூன்றும்
தவத்தில் தருக்கினார் கோள். 79

80. பழிக்குப் பயப்படாது நடந்து கொள்ளும் பசுப் போல்வானும், கேடு நேர்ந்தபோது தான் மேற்கொண்ட அரிய தவத்தினைக் கைவிட்ட எருமை போல்வானும், தனக்கு உட்பட்டவளாக மனைவியைக் கொண்டிருந்தும் அவளுக்கு அஞ்சி நடக்கின்ற எருது போல்வானும் ஆகிய இம்மூவரும் சோற்றை உண்ணுதல் நெஞ்சினுக்கு ஒரு நோயாம். (மூவரும் மக்கள் போலும் உண்டிருத்தல் கேடானது; இவர்கள் மக்கள் அல்லர்; மாக்களே யாவர்).

81. முறையறிந்து செய்யமாட்டாதவன் பெற்ற தலைமை நிலையும், மனத்தில் உறுதிப்பாடு இல்லாதவன் மேற்கொண்ட தவமும், நிறைவு பெற்ற ஒழுக்கத்தைத் தெளிந்து நடவாதவன் பெற்ற அழகும் ஆகிய இம்மூன்றும் புதரில் விதைத்த விதையோடு ஒக்கும். (வீணாகும் என்றவாறு).

82. பலரும் நீருண்ணும் நீர்த்துறைபோல யாவர்க்கும் தன் தோளைத் தந்து வாழ்கின்ற வேசியும், நாள்தோறும் சூதாடும் இடத்தை நாடிச்செல்லும் பண்பற்ற சூதாடியும், வட்டி வாங்கி மிகுந்த பொருளைத் தேடுகின்றவனும் ஆகிய இம்மூவரும் ஆசையாகிய கடலில் அழுந்துகின்றவர் ஆவர்.

83. சான்றோர் நடுவே சான்றோனாக நடத்தலும், எந்நாளும் நட்புக்கொண்டு கலந்தவர் நடுவே நண்பனாக நடத்தலும், தன்னை விரும்பாதவர் நடுவே பாய்ந்தெழுந்து அவர் விரும்பாதவைகளைச் சொல்லாமையும் ஆகிய இம் மூன்றும் நன்மையை ஆள்வோர் நடந்து செல்லும் வழி களாம்.

84. உப்பின் பெரிய குவியல் நீர் பட்டால் இல்லாமல் போகும்; நட்பின் வளமான தொடக்கம் பொய் சொன்னால் இல்லாமல் போகும்; நடுவுநிலைமை உடையார் மழையைப் போன்ற தன்மையினர்; இம்மூன்றும் நல்வழி தூர்ந்து போகாமைக்குக் கருவிகளாம்.

பழிஅஞ்சான் வாழும் பசுவும், அழிவினால்
கொண்ட அருந்தவம் விட்டானும்,—கொண்(டு)இருந்து
இல்அஞ்சி வாழும் எருதும் இவர்மூவர்
நெல்உண்டல் நெஞ்சிற்கோர் நோய். 80

முறைசெய்யான் பெற்ற தலைமையும், நெஞ்சில்
நிறைஇலான் கொண்ட தவமும்,—நிறைஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து. 81

தோள்வழங்கி வாழும் துறைபோல் கணிகையும்,
நாள்கழகம் பார்க்கும் நயமிலாச் சூதனும்,
வாசிகொண்(டு) ஒண்பொருள் செய்வானும் இம்மூவர்
ஆசைக் கடலுள்ஆழ் வார். 82

சான்றாருள் சான்றான் எனப்படுதல், எஞ்ஞான்றும்
தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல்,—பாய்ந்(து)எழுந்து
கொள்ளாருள் கொள்ளாத கூறாமை இம்மூன்றும்
நல்லார் வழங்கு நெறி. 83

உப்பின் பெருங்குப்பை நீர்படின் இல்லாகும்;
நட்பின் கொழுமுளை பொய்வழங்கின் இல்லாகும்;
செப்பம் உடையார் மழைஅனையர்; இம்மூன்றும்
செப்பநெறி தூரா ஆறு. 84

85. நீர்க்கால்கள் நன்றாக அமைந்திராத குளமும், வயிறாரத் தாயின் முலைப்பாலை உண்ணாத குழந்தையும், இளமைப் பருவத்தில் கல்வி கற்கும் மாட்சியைப் பெறாத மனிதரும் ஆகிய இம்மூவரும் வறுமை சேர்ந்தவர் ஆவர்.

86. தன் செய்கை பகைவரால் ஏளனப்படுத்தப்படும் முறைமையுடையதாய் அமைதலும், அப்பகைவரிடத்து நடந்துள்ள செயல்களைக் கேட்டு அவற்றை மறவாத கூரிய அறிவுடையவனாய் இருத்தலும், (அவ்வாறு நினைவில் கொண்டுள்ள செயல்களைத்) தடைப்படாமல் (தன் அரசனிடம்) சொல்லும் தெளிவுடையவனாக இருத்தலும் ஆகிய இம்மூன்றும் அறிவுடைய ஒற்றாளின் குணங்களாம்.

87. உயிர்களிடத்தே உள்ள அன்பினாலாய பெரும் பிணிப்பாகிய கட்டு (தன்னை விட்டு)நெகிழ்ந்து நீங்குதலும், கல்வியாகிய பெரிய தெப்பத்தைப் பொருள் முதலியவற்றின் மேலுள்ள ஆசையால் கைவிடுதலும், நட்பின் நயப்பாட்டுத் தன்மையிலிருந்து நீங்குதலும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்குக் குற்றங்களை விளைவிக்கின்ற பகையாகும்.

88. ஒருயிரைக் கொல்வதற்குத் தான் அஞ்சாதவனாகி அதனைச் செய்ய விரும்புபவனும், கல்வியறிவில்லாக் கூட்டத்தோடு சேர்பவனும், (ஒரு முயற்சியும் செய்யா தவனாய்) வாளா இருந்து தன்னிடமுள்ள பெரிய செல்வத்தைச் செலவழித்துக் குறைப்பவனும் ஆகிய இம்மூவரும் அறிவிலார் ஆகும் பான்மையுடையவர் ஆவர்.

89. நோய் தன்னைத் தின்னும்பொழுது தான் துன்புற்று வருந்துதல், காலந்தாழ்த்தல் இல்லாத பெரிய கூற்றுவன் உயிரைக் கொண்டு செல்லுதல், தன்னிடமுள்ள செல்வம் மாட்சிமையின்றிச் செயல்படுதல் ஆகிய இம்மூன்றும் ஒருவன் நிலையைக் குலைக்கின்ற புணை யில்லாத நீர்வழிகளாம்.

வாய்நன்(கு) அமையாக் குளனும், வயிறுஆரத்
தாய்முலை உண்ணாக் குழவியும்,—சேய்மரபில்
கல்விமாண்பு இல்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார். 85

எள்ளப் படும்மரபிற்(று) ஆகலும், உள்பொருளைக்
கேட்டு மறவாத கூர்மையும், முட்டின்றி
உள்பொருள் சொல்லும் உணர்ச்சியும் இம்மூன்றும்
ஒள்ளிய ஒற்றாள் குணம். 86

அன்புப் பெருந்தளை யாப்பு நெகிழ்ந்(து)ஒழிதல்,
கற்புப் பெரும்புணை காதலில் கைவிடுதல்,
நட்பின் நயநீர்மை நீங்கல் இவைமூன்றும்
குற்றம் தரூஉம் பகை. 87

கொல்வது தான்அஞ்சான் வேண்டலும், கல்விக்(கு)
அகன்ற இனம்புகு வானும், இருந்து
விழுநிதி குன்றுவிப் பானும்,இம் மூவர்
முழுமக்கள் ஆகற்பா லார். 88

பிணிதன்னைத் தின்னுங்கால் தான்வருந்து மாறும்,
தணிவில் பெருங்கூற்(று) உயிர்உண்ணு மாறும்,
பிணைச்செல்வம் மாண்பின்(று) இயங்கல்இம் மூன்றும்
புணையில் நிலைகலக்கும் ஆறு. 89

90. அருளைத் தன் மனத்தில் நிறைத்து வைத்திராதவனும், பொருளைப் பிறர்க்கும் கொடாது தானும் துய்க்காது புதைத்து வைத்திருப்பவனும், முறைகடந்து பிறர்க்குத் துன்பம் தருகின்ற சொற்களைச் சொல்லுகின்றவனும் ஆகிய இம்மூவரும் உலகில் பிறந்திருந்தாலும் பிறவாதவரே ஆவர்.

91. பிறர்க்குக் கொடுக்கும் பொருட்டுப் பொருளைத் தேடுக; அறவழியில் சேரும் பொருட்டுப் பெருமை பொருந்திய நூல்களைப் படைக்க; சொல்வது எதனையும் அருள் விரும்பிச் சொல்லுக; இம்மூன்று செய்கைகளும் நரகம் சேரவொட்டாத வழிகளாம்.

92. (தாய் தந்தை முதலாயினார்) உயிரோடிருக்கும் போது அவரை இகழ்ந்து சொல்லுதலும், அவர்கள் இறந்த பிறகு "யான் அவர்களை இழந்துவிட்டேனே" என்று சொல்லி இரங்குதலும், நோயடைந்து தன் உடம்பு துன்புறும்பொழுது (முன்பு அறம் செய்திலோமே என்று) நாணமுறுதலும் ஆகிய இம்மூன்றும் புகழை நிலை நிறுத்தாத உடம்புடையாருடைய செய்கைகளாம்.

93. (அற ஒழுக்கங்களைப் பெறுதற்குரிய) சிறந்த குலத்திலே தோன்றாதவனும், இலக்கண இலக்கிய நூல்களை ஒரு சிறிதும் கற்காத பேதையும், எப்பொழுதும் முறை கடந்து உரைக்கும் உரையை விரும்புகின்றவனும் ஆகிய இம்மூவரும் மக்கட் பிறப்பில் பிறந்தும் பிறவாதவரே யாவர்.

94. அறிவில்லாதவர்களுக்கு இடமாய் இருட்டாய்க் கிடக்கின்ற உலகமும், நன்மை தீமை உணராது உரைக்கும் வெகுளியும், நற்பொருள் அல்லவற்றில் விருப்பம் கொள்ள வைக்கும் பேராசையும் ஆகிய இவைமூன்றும் வாழுகின்ற உயிர்களுக்கு அறியாமையைத் தருவனவாம்.

அருளினை நெஞ்சத்(து) அடைகொடா தானும்,
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்,
இறந்(து)இன்னா சொல்லகிற் பானும்இம் மூவர்
பிறந்தும் பிறந்திலா தார். 90

ஈதற்குச் செய்க பொருளை; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை;—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை; இம் மூன்றும்
இருள்உலகம் சேராத ஆறு. 91

பெறுதிக்கண் பொச்சாந்(து) உரைத்தல், உயிரை
இறுதிக்கண் யாம்இழந்தேம் என்றல்,—மறுவந்து
தன்உடம்பு கன்றுங்கால் நாணுதல்இம் மூன்றும்
மன்னா உடம்பின் குறி. 92

விழுத்திணைத் தோன்றா தவனும், எழுத்தினை
ஒன்றும் உணராத ஏழையும்,—என்றும்
இறந்துரை காமுறு வானும் இம்மூவர்
பிறந்தும் பிறவா தவர். 93

இருளாய்க் கழியும் உலகமும், யாதும்
தெரியா(து) உரைக்கும் வெகுள்வும்,—பொருள்அல்ல
காதல் படுக்கும் விழைவும் இவைமூன்றும்
பேதைமை வாழும் உயிர்க்கு. 94

95. தன்னிடம் நட்பு இல்லாதவரிடத்தில் தான் விருப்புற்று உரிமை கொண்டாடுபவனும், மனைவியைக் காத்தலினின்றும் நீங்கிய அறிவில்லாதவனும், பண்பில்லாத குற்றமுடைய சொற்களைச் சொல்லுகின்றவனும் ஆகிய இம்மூவரும் ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்காதவர்கள் ஆவர்.

96. நல்லறிவு கெடும்படித் தன்னை வருத்துகின்ற பசித்துன்பமும், அடக்கம் கெடும்படி வெளிப்படும் ஒருவனது பேராசையும், பகைவருடைய கொடிய சொற்களைப் பொறாத வெகுளியும் ஆகிய இம்மூன்றும் ஒருவரது நல்வினைகளை அழிக்கும் படைகள்.

97. கணவனுடைய கருத்தறிந்து நடக்கின்றவள் மனைவியாவாள்; மேற்கொண்ட நோன்புகளைச் செய்யத்தக்க முறைப்படி செய்கின்றவன் தவசியாவான்; கொடுமைகளை நீக்கி நன்மைகளைச் செய்பவன் அரசனாவான். இம்மூவரும் பெய் என்கின்ற வேளையில் பெய்கின்ற மழையைப் போன்ற தன்மையையுடையவர்.

98. அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமையன் ஆகிய ஐந்து பெரியோர்களின் கட்டளையை மறுத்து நடத்தலும், ஆர்வமுடன் குறையாத நட்புக் கொண்டவரிடத்துப் பொய் கூறலும், நெஞ்சில் நிலைத்த கற்புடையவளை விட்டு நீங்குதலும் ஆகிய இம்மூன்றும் நன்மையின் பக்கம் இல்லாதவர் செயல்களாம்.

99. வேள்விச் செந்தீயை வளர்க்கின்ற அந்தணர் தமக்குரிய அறத்தை நினைந்து வாழ்தலும், கடுஞ்சின அரசன் நீதி முறையறிந்து ஆட்சி நடத்தலும், பெண்டிர் தம் கணவர் கருத்து வழியே நடத்தலும் ஆகிய இம்மூன்றும் திங்கள் தோறும் மும்முறை மழை பெய்வதற்கு வித்தாக அமைவன.

நண்பிலார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்,
பெண்பாலைக் காப்(பு)இகழும் பேதையும்,—பண்பில்
இழுக்கான சொல்லாடு வானும்இம் மூவர்
ஒழுக்கம் கடைப்பிடியா தார். 95

அறி(வு)அழுங்கத் தின்னும் பசிநோயும், மாந்தர்
செறி(வு)அழுங்கத் தோன்றும் விழைவும்,—செறுநரின்
வெவ்வுரை நோனா வெகுள்வும், இவைமூன்றும்
நல்வினை நீக்கும் படை. 96

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி; கொண்டன
செய்வகை செய்வான் தவசி; கொடி(து)ஓரீஇ
நல்லவை செய்வான் அரசன்; இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை. 97

ஐங்குரவர் ஆணை மறுத்தலும், ஆர்வுற்ற
எஞ்சாத நட்பினுள் பொய்வழக்கும்,—நெஞ்(சு)அமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலும் இம்மூன்றும்
நற்புடைஇ லாளர் தொழில். 98

செந்தீ முதல்வர் அறம்நினைத்து வாழ்தலும்,
வெஞ்சின வேந்தன் முறைநெறியால் சேர்தலும்,
பெண்பால் கொழுநன் வழிச்செலவும் இம்மூன்றும்
திங்கள்மும் மாரிக்கு வித்து. 99

100. கற்றறிவுடையாரை விட்டு நீங்கி வாழ்பவனும் தாம் விரும்பியதை விரும்பியவாறே செய்து நடக்கின்ற அறிவில்லாதவனும், தடையின்றித் தீங்குகளைச் செய்யும் இழிமகனும் ஆகிய இம்மூவரும் நல்ல பெரியோர்களோடு சேர்த்து எண்ணப்படாதவர் ஆவர்.

101. தன்மேல் அன்பு நிறைந்த படையும், பகைவர் பலர் இணைந்து எத்திசை வந்தாலும் அஞ்சவேண்டாத மதில் அரணும், சேர்த்து வைத்துப் பாதுகாப்பாய் அமைந்த எடுக்க எடுக்கக் குறையாத பெருஞ் செல்வமும் ஆகிய இம் மூன்றும் உலகை ஆளுகின்ற அரசர்க்கு உறுப்புகளாம்.

கற்றாரைக் கைவிட்டு வாழ்தலும், காமுற்ற
பெட்டாங்கு செய்தொழுகும் பேதையும்,—முட்டின்றி
அல்லவை செய்யும் அலவலையும் இம்மூவர்
நல்லுலகம் சேரா தவர். 100

பத்திமை சான்ற படையும், பலர்தொகினும்
எத்திசையும் அஞ்சா எயில்அரணும், —வைத்(து)அமைந்த
எண்ணின் உலவா இருநிதியும் இம்மூன்றும்
மண்ணாளும் வேந்தர்க்(கு) உறுப்பு. 101

திரிகடுகம்

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை